

# சந்திரயான்-3 வெற்றிப் பயணம்

## திட்டமிட்டபடி புவி வட்டப் பாதையில் நிலைநிறுத்தம்

## ஆக.23-இல் நிலவில் தரையிறங்கும்

## சந்திரயான் வரலாறு

## சந்திரயான் 3 சாதனைப் பயணம்

## எப்படி பயணிக்கிறது சந்திரயான்...?

## தென் துருவத்தில் ஆய்வு ஏன்?

## சந்திரயான் -3 தனித்துவங்கள் என்னென்ன?

திருவான்மியூர் COTTON HOUSE

## தலைமையேற்ற தமிழக விஞ்ஞானிகள்!


வீரமுத்துவேல்

சந்திரயானின் மூன்று திட்டங்களுக்கும் தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே செயல் மற்றும் தலைமை இயக்குநர்களாக இருந்துள்ளனர். அதன்படி, முதல் திட்டத்துக்கு பொள்ளாச்சியைச் சேர்ந்த விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரையும், இரண்டாவது திட்டத்துக்கு சென்னையைச் சேர்ந்த வனிதா முத்தையாவும் திட்ட இயக்குநர்களாக செயல்பட்டனர். அதன் தொடர்ச்சியாக, தற்போது விண்ணில் செலுத்தப்பட்டுள்ள சந்திரயான்–3 திட்டத்துக்கு விழுப்புரத்தைச் சேர்ந்த இஸ்ரோ விஞ்ஞானி வீரமுத்துவேல் இயக்குநராக உள்ளார்.

இவர் கடந்த 2019–இல் திட்டத்தின் இயக்குநர் பொறுப்பை ஏற்றார். இவர் தந்தை ரயில்வே ஊழியராக பணியாற்றிவர். தாம்பரம் அருகே உள்ள தனியார் கல்லூரியில் மெக்கானிக்கல் பொறியியல் படித்த வீரமுத்துவேல், அதைத் தொடர்ந்து, ஐஐடியில் முதுநிலை ஆராய்ச்சி படிப்பில் பட்டம் பெற்றார்.

சந்திரயான் –3 திட்டத்தின் முதல்கட்ட வெற்றிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: சந்திரயான்–3 விண்கலத்தின் ரோவரில் உள்ள ஆறு சக்கரங்களில் ஒரு சக்கரத்தில் அசோகச் சின்னமும், மற்றொரு சக்கரத்தில் இஸ்ரோவின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தைச் சேர்ந்த பலர் இத்திட்டத்தில் பணியாற்றி உள்ளனர். சந்திரயான்–3 திட்டம் ஒட்டுமொத்த தேசத்துக்கான திட்டம். தமிழனாக மட்டுமல்லாது ஓர் இந்தியனாக சந்திரயான் – 3 திட்டத்துக்கு பங்களித்ததில் பெருமைப்படுகிறேன் என்றார் அவர்.

## பிரதமர் மோடிக்கு பிரான்ஸின் உயரிய விருது


பாரீஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு பிரான்ஸின் உயரிய விருதை வழங்கி கௌரவித்த அந்நாட்டு அதிபர் இமானுவல் மேக்ரான்.

**பாரீஸ், ஜூலை 14:** பிரான்ஸில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருதை வழங்கி அதிபர் இமானுவல் மேக்ரான் கௌரவித்தார்.

பாரீஸில் உள்ள எலைசி மாளிகையில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு பிரான்ஸின் உயரிய விருதான 'கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர்' விருது வழங்கப்பட்டது. அந்நாட்டு அதிபர் இமானுவல் மேக்ரான் இந்த விருதை பிரதமர் மோடியிடம் வழங்கினார்.

பிரான்ஸின் இந்த உயரிய விருதைப் பெறும் முதல் இந்திய பிரதமர் என்ற சிறப்பையும் பிரதமர் மோடி பெற்றுள்ளார். தென்னாப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, பிரிட்டன் அரசர் சார்லஸ், ஜெர்மனி முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்கெல், ஐ.நா. முன்னாள் பொதுச் செயலர் போட்ரஸ் காலி உள்ளிட்டோர் அந்த உயரிய விருதை ஏற்கெனவே பெற்றுள்ளனர்.

விருதைப் பெற்ற பிறகு பிரதமர் மோடி வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'பிரான்ஸின் உயரிய விருதை பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன். இது 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த பெருமை. அதற்காக பிரான்ஸ் அதிபர் மேக்ரான், பிரான்ஸ் அரசு, அந்நாட்டு மக்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறேன். இந்தியா மீது பிரான்ஸ் கொண்டுள்ள அன்பை இது வெளிக்காட்டுகிறது. இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவை வலுப்படுத்தவும் இது வழிவகுக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் பிரதமர் மோடியின் தலைமைத்துவத்தைப் பாராட்டி இந்த விருதை பிரான்ஸ் அரசு வழங்கியுள்ளதாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பிரதமர் மோடிக்குக் கடந்த மாதத்தில் எகிப்தின் உயரிய விருது வழங்கப்பட்டிருந்தது. பப்புவா நியூ கினியா, ஃபிஜி, அமெரிக்கா, பூடான், பஹ்ரைன், மாலத்தீவுகள், ரஷியா, ஐக்கிய அரபு அமீரகம், பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், சவூதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் உயரிய விருதுகளையும் பிரதமர் மோடி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் பதவியேற்பு

**புது தில்லி, ஜூலை 14:** உச்சநீதிமன்ற நீதிபதிகளாக உஜ்ஜல் புயான், வெங்கடநாராயண பாட்டீ ஆகியோர் வெள்ளிக்கிழமை பதவியேற்றனர்.

தெலங்கானா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக உஜ்ஜல் புயானும், கேரள உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக வெங்கடநாராயண பாட்டீயும் பதவி வகித்து வந்தனர்.

இருவரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலீஜியம் குழு மத்திய அரசுக்குப் பரிந்துரைத்தது. அந்தப் பரிந்துரைக்கு கடந்த புதன்கிழமை மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், தில்லியில் உச்சநீதிமன்றத்தில் உள்ள அரங்கத்தில் இருவரும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக வெள்ளிக்கிழமை பதவியேற்றனர். அவர்களுக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உள்பட மொத்தம் 34 நீதிபதி பணியிடங்கள் உள்ளன. இந்நிலையில், தற்போது பதவியேற்றுள்ள இருவரையும் சேர்த்து உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 32–ஆக அதிகரித்துள்ளது. இரண்டு இடங்கள் காலியாக உள்ளன.

# பதிவுத் துறை சேவைகளில் செயற்கை நுண்ணறிவு நுட்பம்

## தமிழக அரசு நடவடிக்கை

**சென்னை, ஜூலை 14:** பதிவுத் துறையில் வழங்கப்படும் சேவைகளில் அதிநவீன செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை வணிக வரி மற்றும் பதிவுத் துறை செயலர் பா.ஜோதி நிர்மலாசாமி வெள்ளிக்கிழமை வெளியிட்டார். உத்தரவு விவரம்:

பதிவுத் துறையிலுள்ள அனைத்து சேவைகளும் இணையதள அமைப்பிலான ஸ்டார் 2.0 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டம் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இதனடிப்படையில், இப்போதுள்ள ஸ்டார் 2.0 திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளில் செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங், பெருந்தரவு பகுப்பாய்வு போன்ற மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சான்றிட்ட நகல் மற்றும் வில்லங்கச் சான்று முதலான சேவைகளை தானியங்கி முறையில் தயாரித்தலுக்கு அதிநவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இப்போதுள்ள ஸ்டார் 2.0 கணினி மென், வன்பொருள்களை மேம்படுத்தி, ஸ்டார் 3.0 திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.323.45 கோடி செலவிடப்படுகிறது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**கண்காணிக்க குழு:** ஸ்டார் 3.0 செயலாக்கத் திட்டத்தைக் கண்காணிக்க தலைமைச் செயலரின் தலைமையில் மாநில அளவிலான குழுவும், திட்ட செயலாக்கத்துக்காக பதிவுத் துறை தலைமையில் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கென திட்ட ஒருங்கிணைப்பாளரும், திட்ட ஆலோசகர்கள் இருவரும் நியமிக்கப்படுவர்.

முழுமையான வன்பொருள், மென்பொருள், பணியமைப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் ஸ்டார் 3.0 திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# பாதுகாப்பு ஒத்துழைப்பே இந்தியா-பிரான்ஸ் உறவின் வலுவான தூண்: பிரதமர் மோடி

**பாரீஸ், ஜூலை 14:** 'இந்தியா-பிரான்ஸ் உறவில் பாதுகாப்பு ஒத்துழைப்புதான் வலுவான தூணாகத் திகழ்கிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கான இருதரப்பு உத்திசார்ந்த உறவுகளை வலுப்படுத்துவதற்கான திட்டம் லட்சிய இலக்குகளுடன் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரான்ஸுக்கு 2 நாள் அரசு முறைப் பயணமாக வியாழக்கிழமை வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி, அதிபர் இமானுவல் மேக்ரானுடன் வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தினார்.

பின்னர், இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்கள் சந்திப்பில் பங்கேற்றனர். அப்போது, பிரதமர் மோடி கூறியதாவது:

உத்திசார்ந்த கூட்டாண்மையில் 25 ஆண்டுகள் நிறைவை இந்தியா-பிரான்ஸ் கொண்டாடுகிறது.



பாரீஸில் செய்தியாளர்களை வெள்ளிக்கிழமை கூட்டாக சந்தித்த பிரதமர் மோடி, பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான்.

கடந்த 25 ஆண்டுகளில் அமைத்த வலுவான அடித்தளத்தில், அடுத்த 25 ஆண்டுகளுக்கான திட்டத்தைத் துணிவான மற்றும் லட்சிய இலக்குகளுடன் நாங்கள் தயாரித்து வருகிறோம்.

இந்தியா-பிரான்ஸ் இடையிலான இருதரப்பு உறவில் அடிப்படை மற்றும் வலுவான தூணாக பாதுகாப்பு ஒத்துழைப்பு எப்போதும் இருந்து வருகிறது. இது இரு நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர நம்பிக்கையின் சின்னமாகும். 'இந்தியாவில் தயாரிப்போம்' மற்றும் 'தன்னிறைவு இந்தியா' ஆகிய இந்தியாவின் லட்சியத் திட்டங்களில் பிரான்ஸ் ஒரு முக்கிய கூட்டாளியாகத் திகழ்கிறது.

நீர்மூழ்கிக் கப்பல்கள் முதல் கடற்படை விமானங்கள் வரை எங்களது தேவைகள் மட்டுமின்றி மற்ற நட்பு நாடுகளின் தேவைகளையும் ஒன்றுசேர்ந்து நாங்கள் நிறைவேற்ற விரும்புகிறோம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவும், பிரான்ஸும் ஒன்றாக உள்ளன. எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு எதிராக வலுவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்றார். உலக அமைதிக்கு பங்களிக்க இந்தியா எப்போதும் தயாராக உள்ளது என்றார் பிரதமர் மோடி.

பிரான்ஸ் அதிபர் மேக்ரான் கூறுகையில், 'வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் பிரான்ஸ் நாட்டு மாணவர்கள் 30,000 பேர் இந்தியாவில் கல்வி பயில்வார்கள். அதேபோல், இந்திய மாணவர்கள் பிரான்ஸ் கல்வி நிலையங்களில் படிக்கும் வகையில் விசா நடைமுறைகள் எளிமையாக்கப்படும்' என்றார்.

## 'பிரான்ஸில் விரைவில் திருவள்ளுவர் சிலை'

**பாரீஸ், ஜூலை 14:** 'பிரான்ஸில் விரைவில் திருவள்ளுவர் சிலை நிறுவப்படும்' என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

உலகின் மூத்த மொழி தமிழ் என்று பெருமிதம் தெரிவித்த அவர், 'பன்முகத் தன்மையே இந்தியாவின் மிகப் பெரிய பலம்' என்று குறிப்பிட்டார்.

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக பிரான்ஸுக்கு வியாழக்கிழமை வந்த பிரதமர் மோடி, பாரீஸ் நகரில் இந்திய சமூகத்தினர் பங்கேற்ற நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

செயின் நதியின் நடுவே ஒரு தீவில் அமைந்துள்ள 'லா செயின் மியூசிக்கல்' எனும் பிரம்மாண்ட அரங்கில் இந்நிகழ்ச்சியில், பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவில் 100-க்கும் மேற்பட்ட மொழிகளில் 32,000-க்கும் மேற்பட்ட செய்தித்தாள்கள் மற்றும் 900-க்கும் மேற்பட்ட செய்தித் தொலைக்காட்சிகள் செயல்படுகின்றன. உலகின் மூத்த மொழி தமிழ். இது இந்தியாவுக்கே பெருமைக்குரிய விஷயமாகும்.

புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் ரோஜர் ஃபெடரரை 'தலைவா' என்ற வார்த்தையை பயன்படுத்தி, விம்பிள்டன் நிர்வாகம் அண்மையில் குறிப்பிட்டது. இதன்மூலம் இந்திய மொழிகளின் பன்முகத்தன்மையை ஒட்டுமொத்த உலகமும் அனுபவித்து மகிழ்வதைக் காண முடிகிறது.

பிரான்ஸில் இந்திய யுபிஐ மூலம் எண்ம பரிவர்த்தனை செய்தற்கான ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது. எனவே, பிரான்ஸ் வருகை தரும் இந்திய சுற்றுலா பயணிகள், யுபிஐ மூலம் விரைவில் பரிவர்த்தனை செய்ய முடியும் என்றார் பிரதமர் மோடி.

**திருக்குறளை மேற்கோள் காட்டிய பிரதமர்:** 'பிரான்ஸின் செர்ஜி பகுதியில் அடுத்த சில வாரங்கள் அல்லது மாதங்களில் திருவள்ளுவருக்கு சிலை நிறுவப்படவுள்ளது' என்ற அறிவிப்பை வெளியிட்ட பிரதமர் மோடி, 'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற திருக்குறளையும் மேற்கோள் காட்டினார்.

மார்சே நகரில் இந்திய துணைத் தூதரகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் பிரதமர் மோடி வெளியிட்டார்.

EVA STALIN

# விவசாயிகளைக் காப்போம்

பி.எஸ். மாசிலாமணி

தமிழ்நாட்டில் தற்போது பரபரப்பாக பேசப்படும் செய்தி, தக்காளியின் வரலாறு காணாத விலை உயர்வுதான். விலை உயர்வை பற்றி கவலைப்படுபவர்கள், விலை குறைவால் பாதிக்கப்படும் விவசாயிகளை பற்றி என்றேனும் கவலைப்பட்டதுண்டா?

ஆறு மாதத்திற்கு முன் தக்காளிக்கு உரிய விலை கிடைக்காததால் லாரி லாரியாக தக்காளியைத் தெருவில் கொட்டியதை மறக்க முடியுமா? காய்கறிகள் விலை உயர்ந்தால் நுகர்வோர் பாதிக்கப்படுவர். இது அரசின் செயல்பாட்டை கேள்விக்குறியாக்கும். விலை குறையும்போது விவசாயிகள் பாதிக்கப்படுவார்களே என்ற கவலை யாருக்கும் வருவதில்லை.

வெளிச்சந்தையில் தக்காளியின் விலை ரூ. 150-ஐ தாண்டியதால் மாநில அரசு நியாயவிலைக் கடைகளில் தக்காளியை விற்பனை செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. சின்ன வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய் உள்ளிட்டவையும் விலையேற்றம் கண்டு வருகின்றன. விரைவில் இவையும் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படலாம்.

2002-இல், தக்காளி கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலை வந்தபோது விவசாயிகள் தக்காளியைத் தெருவிலே கொண்டு வந்து கொட்டினர். சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட விலை குறைவால் தக்காளியை கால்நடைகளுக்குக் கொடுத்தார்கள். கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலம் முன் ஒரு கிலோ தக்காளியை ஒரு ரூபாய்க்கு விற்று விவசாயிகள் அரசின் கவனத்தை ஈர்க்க முயன்றனர்.

கடந்த ஓராண்டு காலமாகவே தேங்காயின் விற்பனை விலை சரிந்துள்ளது. 2018-இல் ஏற்பட்ட கஜா புயல் பாதிப்பால் இரண்டு லட்சம் தென்னை மரங்கள் சாய்ந்தன. விவசாயிகள் துடித்தனர். ஆனாலும் மீண்டும் நம்பிக்கையோடு புதிய கன்றுகளை நடவுசெய்தனர். ஒரு தேங்காய்க்கு உற்பத்தி முதல் விற்பனைக்கு கொண்டு வரும் வரை செலவாகும் தொகைக்குதான் அதை விற்க முடிகிறது .

தமிழ்நாடு அரசு நிலைமை அறிந்து கொப்பரை கொள்முதல் செய்தது. ஆனால், விவசாயிகள் கொண்டு வரும் அளவில் கொப்பரை கொள்முதல் செய்வதில்லை. கேரளத்தைப்போல் தேங்காய்களாக அரசு கொள்முதல் செய்திட விவசாயிகள் போராடி வருகின்றனர்.

கலப்பின மீன்கள் கிலோ ரூ. 180-க்கு விற்பனையான நிலையில் கடந்த ஆறு மாதங்களாக அது ரூ. 100 எனக் குறைந்துவிட்டது. ஆந்திரத்திலிருந்து தமிழக வடமாவட்டங்களுக்கு மீன்களைக் கொண்டு வந்து விற்பனை செய்வதாலும், குளம் வெட்டி மீன் வளர்ப்பு செய்வதாலும், பண்ணை குட்டைகள் வெட்டிட மானிய நிதி உதவி செய்யப்படுவதாலும், ஆயிரக்கணக்கான ஏக்கரில் உயர்ரக கலப்பின மீன்கள் உற்பத்தி பெருகி உள்ளதாலும் மீன்களின் விலை குறைந்துள்ளது.

அவ்வப்போது ஏற்படும் வேளாண் விளைபொருட்களின் விலை உயர்வால் விவசாயிகளுக்கு பெரிய அளவில் லாபம் கிடைக்காது. ஆனால் விலை குறைந்தால் விவசாயிகள் தான் அதன் முழு இழப்பையும் சுமக்கவேண்டி வரும். இடைத்தரகர்களான வியாபாரிகளுக்கோ விலை ஏறினாலும் இறங்கினாலும் லாபம் கிடைத்துவிடும்.

விலை குறைவு நேரத்தில் வாங்கி பதுக்கி வைத்து, தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலை ஏறும்போது விற்று லாபம் பார்க்கிற நிலையும் உண்டு. நீண்ட நாட்கள் சேமிக்க வாய்ப்பில்லாததால் காய்கனி வணிகத்தில் இது குறைவு. வேளாண் உணவுப்பொருட்கள் விலை குறைவதற்கு, வழக்கமான நிலைக்கும் மேலான சாகுபடியால் கிடைக்கும் கூடுதல் உற்பத்தியும் காரணமாகும். இதனால் ஏற்படும் விலை இழப்பு விவசாயிகளையே சேர்கிறது.

பேரிடர் காலத்திலும், பூச்சி தாக்குதலாலும் மகசூல் குறையும். இதனால் ஏற்படும் இழப்பையும் விவசாயிகளே ஏற்கின்றனர். கையில் இருந்த பணத்தை மட்டுமல்லாமல், வட்டிக்கு வாங்கிய தொகையையும் வெட்ட வெளியில் போட்டு கொட்டும் மழையிலும் நடுங்கும் குளிரிலும் நடுநிசி நேரத்திலும் பார்த்துப் பார்த்துக் காத்திருக்கிறான் விவசாயி.

ஆனால், இப்படியான இடர்பாடுகளை எதிர்கொள்ள இவர்களின் சந்ததிகள் தயாராக இல்லை. அவர்கள் விவசாயத்தை விட்டு வெளியேறி வருகின்றனர். ஆனால், இந்நிலையில் வேளாண்மையை புத்தாக்கத் தொழிலாக மேற்கொள்ள ஆர்வம் கொண்டு புதிய புதிய இளைஞர்களும் உள்ளே வருகின்றனர். எனவே இவர்களையும் அரவணைத்திட வேண்டும். இருப்போரையும் காத்திட வேண்டும்.

எதிர்கால உணவுத் தேவைக்கான இலக்கை பருவ காலம், பயிர்வகை இவற்றைக் கணக்கில் கொண்டு பயிரிட விவசாயிகளை அரசு அறிவுறுத்த வேண்டும். இதற்குரிய பயிர்களை உரிய பகுதிகளில் பயிரிடத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டும். உற்பத்தியாகும் வேளாண் உணவுப் பொருட்களை அரசே கொள்முதல் செய்திட முன்வர வேண்டும். இதற்கான சேமிப்பு கலன்களைஉருவாக்கிட வேண்டும்.

விரைவில்அழுகும் உணவு பொருட்களுக்கு குளிர் பதன கிடங்குகள்அமைத்திட வேண்டும். அரசின் நியாயவிலைக் கடைகள், கூட்டுறவு அங்காடிகளில் தற்போது தக்காளி விற்பனை தொடங்கி இருப்பது போல் மற்ற காய்கறிகளையும் விற்பனை செய்ய வேண்டும்.

கூட்டுறவு சின்னத்தில் உள்ள இரு கைகள், விவசாயிகளையும் நுகர்வோரையும் இணைத்திடும் கைகளாய் மாறிட வேண்டும். அப்படிச் செய்தால், இரு தரப்பினருக்கும் நியாயமான விலை கிடைக்கும். இடைத்தரகு என்பதே இல்லாமல் போகும்.

இந்த திட்டத்திற்கு கேரள அரசு முன்மாதிரியாக உள்ளது. கேரளத்தில் 2020-முதல் காய்கறிகளுக்கு விலை நிர்ணயம் செய்து, அவற்றை விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

நெல், கோதுமை, கரும்பு ஆகியவை போல கூடுதல் பயன்பாடு இல்லாத பொருளாக காய்கறி இருக்கலாம். ஆனாலும், அது அத்தியாவசியமான பொருள் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. மாநில அரசு தொலைநோக்குப் பார்வையுடன் கேரள மாநில நடைமுறையை தமிழகத்திலும் கொண்டுவர வேண்டும் என்பதே தமிழக விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

# நினைவில் வாழும் காமராஜர்!



ஹெச்.வி. ஹண்டே



**அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர், பிரதமர் தேர்தலில் போட்டியைத் தவிர்ப்பதற்காக, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக தன் அறைக்கு வரவழைத்து, அவர்களுடைய விருப்பத்தைக் கேட்டறிந்து, இறுதியில் லால்பகதூர் சாஸ்திரியை பாரத பிரதமராக அறிவித்தார்.**

இன்று (ஜூலை 15) காமராஜர் பிறந்தநாள்.

கட்டுரையாளர்: முன்னாள் அமைச்சர்.

## தில்லி வெள்ளப் பெருக்கு: துணைநிலை ஆளுநரிடம் கேட்டறிந்த பிரதமர் மோடி

**புது தில்லி, ஜூலை 14:** தில்லியில் யமுனை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட பாதிப்பு விவரம் குறித்து துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனாவிடம் பிரதமர் மோடி பிரான்ஸில் இருந்தவாறு கேட்டறிந்தார்.

தில்லியில் யமுனை நதியில் வரலாறு காணாத அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், சாலைகளில் வெள்ள நீர் புகுந்தது. தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகுந்ததால், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் தலைநகரில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியது.

இந்தச் சூழலில் வெள்ள பாதிப்பு குறித்து பிரான்ஸில் இருந்தவாறு பிரதமர் மோடி, தில்லி துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனாவிடம் தொலைபேசி வாயிலாக வியாழக்கிழமை கேட்டறிந்தார். இதுகுறித்து வி.கே. சக்சேனா ட்விட்டரில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

தில்லியில் வெள்ளப் பெருக்கால் தேங்கிய தண்ணீர், வெள்ளச் சூழல் குறித்து பிரான்ஸில் இருந்தவாறு பிரதமர் மோடி என்னைத் தொடர்புகொண்டு கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களின் நலன் கருதி, மத்திய அரசிடமிருந்து அனைத்து உதவிகளையும் பெற்று தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் அறிவுறுத்தினார் என்று அதில் தில்லி துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனா தெரிவித்துள்ளார்.



தில்லியில் 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு யமுனையில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் நீரில் மூழ்கிய செங்கோட்டை அருகே உள்ள சாலையில் படகில் பயணம் செய்யும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர்.



அரசியல் தலைவர்களின் நினைவிடமான ராஜ்காட்டை சூழ்ந்துள்ள வெள்ளம்.

## யமுனையின் நீர்மட்டம் படிப்படியாகக் குறைய தொடங்கியது

**புது தில்லி, ஜூலை 14:** தில்லியில் யமுனையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை முதல் படிப்படியாகக் குறையத் தொடங்கியது.

மத்திய நீர் ஆணையத்தின் (சிடபிள்யூசி) தரவுகளின்படி, வெள்ளிக்கிழமை அதிகாலையில் 208.57 மீட்டராக இருந்த நீர்மட்டம், பின்னர் அதிகாலை 5 மணியளவில் 208.48 மீட்டராக குறைந்தது. யமுனையில் காலை 8 மணி நிலவரப்படி நீர்மட்டம் 208.42 மீட்டர், 10 மணிக்கு 208.38 மீட்டர், 11 மணி அளவில் 208.35 மீட்டர் என இருந்தது.

மேலும், மதியம் 1 மணிக்கு 208.27 மீட்டராகவும், 3 மணிக்கு 208.25 மீட்டராகவும் சரிந்தது. தில்லியில் யமுனை நீர்மட்டம் புதன்கிழமை 207.71 மீட்டர் உயரம் உயர்ந்து, 1978-ஆம் ஆண்டு பதிவான 207.49 மீட்டர் சாதனையை முறியடித்தது.

இதற்கிடையில், வெள்ள நீர் மத்திய தில்லியில் உள்ள உச்சநீதிமன்ற நுழைவாயிலில் புகுந்தது. மேலும், ஐடிஓ சந்திப்பு மற்றும் ராஜ்காட் நீரில் மூழ்கியதால் நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டுத் துறையின் சீரமைப்பான் (ரெகுலேட்டர்) சேதமடைந்தது. தில்லி துணை நிலை ஆளுநர் வி.கே. சக்சேனா மற்றும் கேஜரிவால் ஆகியோர் ஐடிஓ சந்திப்பை பார்வையிட்டு, உடைந்த சீரமைப்பானை சரி செய்யும் பணியை ஆய்வு செய்தனர்.

கிழக்கு தில்லியிலிருந்து லுடியன்ஸ் தில்லியை இணைக்கும் முக்கியப் பாதையான ஐடிஓ சாலையில் தண்ணீர் தேங்கியதால், போக்குவரத்து மாற்றுப்பாதையில் திருப்பிவிடப்பட்டது. இதனால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

தில்லியில் சில பகுதிகளில் வெள்ளிக்கிழமை பிற்பகல் லேசான மழை பெய்தது. யமுனை நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில், நகரத்தில் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு இது மேலும் துயரங்களை அளித்தது. லட்சுமி நகர் பகுதிகளிலும், கிழக்கு தில்லியின் ஒரு சில பகுதிகளிலும் மழை பதிவாகியுள்ளது.

EVA STALIN